


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 064 | 4 Pages | 03.10.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 064 | 4 பக்கங்கள் | 03.10.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று**

**விளக்கம்:**
ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது

## பிரான்சில் வெடித்தது மாணவர்கள் போராட்டம்: கல்வி வசதிகள் கோரி வன்முறை



பாரிஸ், அக். 3

பிரான்ஸ் நாட்டில் போதிய கல்வி வசதிகள் மற்றும் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க கோரி, பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தீவிரப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். பல நகரங்களில் இந்த போராட்டம் போலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையேயான கடும் வன்முறை மோதலாக உருவெடுத்துள்ளது.

ஸ்ட்ராஸ்பர்க், லில்லி போன்ற முக்கிய நகரங்களில் திரண்ட நூற்றுக்கணக்கான முகமூடி அணிந்த மாணவர்கள், சாலைகளில் தடுப்புகளை அமைத்து குப்பை தொட்டிகளுக்குத் தீ வைத்தனர். கலவரத்தை கட்டுப்படுத்த போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

அப்போது, போலீசார் தங்களை நோக்கி கொத்து கொத்தாக வீசிய கண்ணீர்ப்புகை குண்டுகளை, முகமூடி அணிந்த மாணவர் ஒருவர் சற்றும் அஞ்சாமல், காற்பந்து உதைப்பது போல் கால்களால் உதைத்துத் தள்ளிய புகைப்படம் மற்றும் வீடியோ காட்சிகள் வெளியாகி உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

மார்சேய் மட்டுமின்றி, பாரிஸின் தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் உள்ள லியோனார்ட் டி வின்சி மற்றும் காஸ்டன்பாசெலார்ட் ஆகிய உயர்நிலை பள்ளிகளின் நுழைவாயில்களும் தீ வைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. நாண்டஸ் மற்றும் ரூவென் நகரங்களிலும் பள்ளிகளில் தீ விபத்துகள் பதிவாகியுள்ளன.

பிரான்சின் இரண்டாவது பெரிய நகரமான மார்சேயில் உள்ள செயின்ட் எக்ஸ்பெரி உயர்நிலைப் பள்ளி கட்டிடத்திற்கு மாணவர்கள் சிலர் தீ வைத்தனர். இந்த தீயை அணைப்பதற்காக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வாகனத்தை சூழ்ந்து கொண்ட வன்முறை கும்பல், தீயணைப்பு வீரர்களை மிரட்டி வாகனத்தை விட்டு விரட்டியடித்தது. பின்னர், அந்த தீயணைப்பு வாகனத்திற்கும் தீ வைத்து கொளுத்தியுள்ளது.

வன்முறை தொடர்பாக பிரான்ஸ் போலீசார் இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கைது செய்துள்ளனர். இந்த மோதலில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும், போலீசாரும் காயமடைந்துள்ளனர்.

## அரபு உலகில் புதிய வரலாறு! மொராக்கோ நாட்டின் முதல் பெண் பிரதமராக பாத்திமா நியமனம்



ரபாத், அக். 3

மொராக்கோ நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக, பாத்திமா எஸ்ஸஹ்ரா அல் மன்சூரி புதிய பிரதமராக நியமிக்கப்பட்டு புதிய சாதனை படைத்துள்ளார். அந்நாட்டில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இவரது கட்சி வெற்றியை பெற்றதைத் தொடர்ந்து, மொராக்கோ மன்னர் ஆறாம் முகமது இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். சட்டத்துறையில் பட்டம் பெற்ற பாத்திமா எஸ்ஸஹ்ரா, ஆரம்பத்தில் ஒரு திறமையான வழக்கறிஞராக தனது வாழ்க்கையை தொடங்கினார். பின்னர் அரசியல் களத்தில் குதித்த அவர், கடந்த 2009 ஆம் ஆண்டு மொராக்கோவின் புகழ்பெற்ற மராகேஷ் நகரின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் அந்த நகரின் முதல் பெண் மேயர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். தொடர்ந்து மக்கள் செல்வாக்குடன் வலம் வந்த பாத்திமா, கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் அந்நாட்டின் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி துறை மந்திரியாக பதவி வகித்து, பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு மக்களின் பாராட்டுக்களை பெற்றார்.

அண்மையில் நடைபெற்ற மொராக்கோ நாடாளுமன்ற தேர்தலில், பாத்திமா தலைமையிலான பிஏஎம்'கட்சி அதிக இடங்களை கைப்பற்றி மாபெரும் வெற்றி பெற்றது. அரசியல் சட்ட விதிகளின்படி, தேர்தலில் அதிக இடங்களை வென்ற கட்சியின் தலைவரையே பிரதமராக நியமிக்க வேண்டும் என்பதால், மன்னர் ஆறாம் முகமது இவரை புதிய பிரதமராக அதிகாரப்பூர்வமாக நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

மொராக்கோ நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற மகுடத்தை சூடியுள்ள பாத்திமா, ஒட்டுமொத்த அரபு நாடுகளின் வரலாற்றிலேயே பிரதமராக பொறுப்பேற்கும் 3வது பெண்மணி என்ற பெருமையையும் தட்டி சென்றுள்ளார். முன்னதாக துனிசியா நாட்டின் பிரதமர்களாக நஜ்லா பவுடன் மற்றும் சாரா ஜாபரானி ஆகியோர் பொறுப்பு வகித்த நிலையில், தற்போது பாத்திமா அந்தப் பெருமைமிகு பட்டியலில் இணைந்துள்ளார். உலகமே உற்று நோக்கும் 2030ஆம் ஆண்டு பிபா உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் நாடுகளுடன் இணைந்து மொராக்கோவும் நடத்த உள்ளது. இந்த உலக கோப்பைக்கான உள்கட்டமைப்பு வசதிகள், அதிநவீன மைதானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த நூற்றுக்கணக்கான கோடி டாலர் முதலீடுகளை ஈர்க்க வேண்டிய பிரம்மாண்ட பொறுப்பு புதிய பிரதமர் பாத்திமா தலைமையிலான அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சொத்து தகராறில் நிகழ்ந்த விபரீதம்.. மூதாட்டி மீது வெந்நீரை ஊற்றிய பேத்தி

திருவனந்தபுரம், அக். 3

கேரள மாநிலம் கொல்லத்தை அடுத்த சடயமங்கலம் அரூர் பகுதியை சேர்ந்தவர் அஸ்வதி (வயது 49). இவரது வீட்டில் அவரது தாயார் ராதாமணியும் வசித்து வருகிறார். அஸ்வதிக்கு அமிர்தா (18) என்ற மகள் இருக்கிறாள். இந்த நிலையில் அஸ்வதி தனது தாயாரிடம் குடும்ப சொத்தை தனது பெயருக்கு எழுதி தருமாறு கேட்டு அடிக்கடி தகராறு செய்து வந்தார்.

சம்பவத்தன்று தனது தாயாரை வீட்டில் இருந்து வெளியேற்றிய அஸ்வதி, தனது மகளின் உதவியுடன் தாயார் ராதாமணி (69) மீது வெந்நீரை ஊற்றினார். இதில் படுகாயம் அடைந்த அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக சடயமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்திற்கு பின் அஸ்வினி தனது மகள் அமிர்தாவுடன் தலைமறைவானார்.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த சடயமங்கலம் போலீசார் தாய்மகள் இருவரையும் தேடிவந்த நிலையில் நேற்று அமிர்தாவை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், தனது தாயார் அஸ்வினி கூறியதால் வெந்நீரைபாட்டி மீது ஊற்றியதாக தெரிவித்தார். இதையடுத்து தலைமறைவான அஸ்வினியை போலீசார் தேடி வருகிறார்கள்.

# மதியம் தொடங்கி இரவிலும் தொடரும் முதல்அமைச்சர் விஜயின் 'ரோடு ஷோ'

சென்னை, அக். 3

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக மாமண்டூர் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல்வர் விஜய்க்கு மலர் தூவி உற்சாக வரவேற்பளித்த பொதுமக்கள்.

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு அக்டோபர் 6ந்தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து முதல் அமைச்சர் விஜய் கடந்த 25ந்தேதி. வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். தொடர்ந்து தாராபுரம் தொகுதியில், வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து அவர் பிரசாரம் செய்தார்.

இந்தநிலையில், 2வது முறையாக மதுராந்தகம் தொகுதியில் முதல் அமைச்சர் விஜய் பிரசாரம் மேற்கொள்கிறார். இந்தமுறை மேடை இல்லாமல், ரோடு ஷோ மூலம் மக்களை சந்தித்து ஆதரவு திரட்ட இருக்கிறார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கான பிரசாரம் இறுதி கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில்,

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூரில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் சாலைவலத்தை முதல் அமைச்சர் விஜய் தொடங்கினார். வழிநெடுகிலும் முதல்அமைச்சர் விஜய்க்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் பூக்கள் தூவி உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

பிரசார வாகனத்தில் மதுராந்தகம் தவெக வேட்பாளர் மரகதம் குமாரவேலுடன் நின்றபடி, அவருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து வருகிறார்.

மாமண்டூரில் தொடங்கி மதுராந்தகம் வரை சுமார் 35



சந்திப்புகளில் பிரசார வாகனத்தில் நின்றபடி, தொண்டர்களின் வரவேற்பை ஏற்று முதல்அமைச்சர் விஜய் வாக்கு சேகரிக்கிறார். சுமார் 35 கிராமங்கள் வழியாக செல்லும் முதல் அமைச்சர் விஜய் மாமண்டூர் புக்கத்துறை சந்திப்பு படாளம் சந்திப்பு ஜானகிபுரம் சந்திப்பு மேலவலம்பேட்டை சந்திப்பு, கருங்குழி சந்திப்பு, கருங்குழி பேரூராட்சி அலுவலகம், மதுராந்தகம் வடக்கு புறவழிச்சாலை நுழைவு, மதுராந்தகம் தெற்கு புறவழிச்சாலை, அய்யனார் கோவில் சந்திப்பு, மோச்சேரி, தண்டலம், பெரும்பாக்கம், கிளியாநகர், செம்பூண்டி, கீழாமூர், பசுவங்கரணை, ராமாபுரம், மோகல்வாடி, எலப்பாக்கம், பொற்பணங்கரணை, அணைக்குன்றம், கீழ்அத்திவாக்கம், மின்னல் சித்தாமூர், பெரும்பேர்கண்டிகை, கடமலைப்புத்தூர், தென்பாக்கம் சந்திப்பு, சோத்துப்பாக்கம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில் சந்திப்பு, சரவம்பாக்கம், பெருவெளி, முதுகரை, வில்லவராயநல்லூர், மாம்பாக்கம், மதுராந்தகம்

சாலை வலத்தின்போது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்துக்குச் சென்று முதல்அமைச்சர் விஜய் தரிசனம் செய்கிறார்.

மதுராந்தகம் ரோடு ஷோவில் முதலமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்த போது, முதல்அமைச்சர் விஜய் மற்றும் அவரது மகன் ஜேசன் சஞ்சயுடன் இருக்கும் புகைப்படத்தை ஒருவர் நினைவுப்பரிசாக வழங்கினார்.

மதுராந்தகம் ரோடு ஷோவில் முதல் அமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, கூட்டத்தில் இருந்த ஒருவர் அவருக்கு நெற்பணிகளை நினைவுப் பரிசாக வழங்கினார்.

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக தண்டலம் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல்வர் விஜய்க்கு தொண்டர் ஒருவர் வெற்றிக்கோப்பையை பரிசாக அளித்தார்.

மதுராந்தகம் தொகுதியில் நடைபெற்ற ரோடு ஷோவில் பங்கேற்ற முதல்அமைச்சர் விஜய்க்கு தொண்டர்கள் பாய் வழங்கினர்.

மதுராந்தகம் எல். எண்டத்தூர் பகுதியில் ரோடு ஷோவில் ஈடுபட்டிருந்த முதல்வர் விஜய், சாலையோர தேநீர் கடையில் தேநீர் அருந்தி பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

மதுராந்தகம் எல்.எண்டத்தூர் பகுதியில் ரோடு ஷோவில் ஈடுபட்டிருந்த முதல்வர் விஜய், அங்கு வயலில் வேலைசெய்த பெண்களிடம் கலந்துரையாடினார்

மதுராந்தகம் தொகுதியில் பரப்புரை வாகனத்தில் இருந்து இறங்கி மாற்றுத்திறனாளிகளை சந்தித்த முதல் அமைச்சர் விஜய்

இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் தொகுதியில் டிராக்டர் ஓட்டி வாக்கு சேகரித்த முதல்அமைச்சர் விஜய்.

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக கீழ் அத்திவாக்கம் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல் அமைச்சர் விஜய்க்கு பறவை சிலையை பரிசாக அளித்தார் தொண்டர் ஒருவர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலையொட்டி முதல்வர் விஜய்யின் ரோடு ஷோ நிறைவடைந்த பகுதியில், பெண் தொண்டர் ஒருவர் பூசணிக்காயில் ஆரத்தி எடுத்து, அதனை சாலையில் உடைக்க முயன்றார்.

மதுராந்தகம் இடைத்தேர்தலுக்காக மேல்மருவத்தூர் பகுதியில் ரோடு ஷோ மேற்கொண்டுள்ள முதல் அமைச்சர் விஜயை, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சக்தி பீட நிர்வாகிகள் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

மதுராந்தகத்தில் ரோடு ஷோவின் போது, முதல்வர் விஜய்க்கு பொதுமக்கள் வழங்கிய அன்பளிப்புகளால் நிரம்பிய பிரசார வாகனத்தின் மேற்பகுதி.

மதியம் தொடங்கி இரவிலும் தொடரும் முதல்அமைச்சர் விஜயின் 'ரோடு ஷோ' வரும் வழியில் எல்லாம் மக்கள் ஆர்ப்பரித்து கோஷம் எழுப்பி வருகின்றனர்.

## இடைத்தேர்தலில் தவெக பணம் கொடுப்பதாக இடதுசாரிகளே குற்றச்சாட்டு தமிழிசை பேட்டி

சென்னை, அக். 3

அதிகமாகக்காசு கொடுப்பது தவெகதான் என தவெக கூட்டணியில் இருப்பவர்களே சொல்கிறார்கள் என தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் மதுராந்தகம், தாராபுரம் உள்ளிட்ட தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் பணப்பட்டுவாடா தொடர்பான குற்றச்சாட்டுகள் அரசியல் களத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இடைத்தேர்தல் நடைபெறும் பகுதிகளில் தவெகவினர் அதிகளவில் பணம் கொடுப்பதாக வாக்காளர்கள் தங்களிடம் தெரிவித்ததாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் சமீபத்தில் கூறியிருந்தார். குறிப்பாக மதுராந்தகம் தொகுதியில் பிரசாரத்தின்போது பொதுமக்களிடம் இருந்து இதுபோன்ற தகவல்கள் கிடைத்ததாக அவர் தெரிவித்திருந்தார்.



வாக்குக்கு பணம் கொடுக்க மாட்டோம் என தவெக தரப்பில் கூறப்பட்டு வரும் நிலையில், அதற்கு மாறாக பணம் வழங்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சண்முகம் வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில், தவெக தரப்பில் வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்படுவதாக இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்தவர்கள் குற்றம்சாட்டி வருவதாக பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

நாங்க தோற்றாலும் பரவாயில்லை, ஓட்டுக்குக் காசு கொடுக்கும் கலாசாரத்தை விஜய் மாற்றிவிட்டார் என்ற தோற்றம் இருந்தது. ஆனால், இப்போது அதிகமாகக் காசு கொடுப்பது தவெகதான் என தவெக கூட்டணியில் இருப்பவர்களே சொல்கிறார்கள். இப்படி மறுபடியும் அதே முறைகேடுகள் வரும்போது, மக்களுக்கு நல்லது செய்தால் நிலைக்கணும். இல்லை என்றால் போகத்தான் செய்யணும் என்றார்.

## இடைத்தேர்தல்: வாக்காளர்களின் கண்ணியத்திற்கு முதல் அமைச்சர் விட்டிருக்கும் சவால்! மு.க.ஸ்டாலின்






சென்னை, அக். 3

உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரி வழக்கறிஞர் சுகன்யாவை வெற்றிபெறச் செய்யுங்கள் என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

இடைத்தேர்தல்: வாக்காளர்களின் கண்ணியத்திற்கு முதல்அமைச்சர் விட்டிருக்கும் சவால்!

மக்களிடம் பெற்ற வாக்குகளை விற்ற ஒரு வேட்பாளர் அதை விலை பேசி வாங்கிய ஒரு கட்சி. இவர்களுக்கா உங்கள் வாக்கு?

பெரும்பான்மையான மக்களின் ஆதரவில்லாத "ரீல்ஸ்" முதல்அமைச்சரின் ஆணவத்துக்குப் பதிலடி கொடுக்க, தாராபுரத்தின் தன்மானம் காக்க அக்டோபர் 6ஆம் நாள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரி வழக்கறிஞர் சுகன்யாவை வெற்றிபெறச் செய்யுங்கள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடமலைக்குண்டு பகுதிகளில் தட்டாங்காய் விளைச்சல் அதிகரிப்பு; விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி, அக். 3

தேனி மாவட்டம் கடமலைமயிலை ஒன்றிய பகுதிகளில் இந்த ஆண்டு தட்டாங்காய் விளைச்சல் பன்மடங்கு அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறுகிய காலத்தில், சீரான லாபம் தரும் பயிராக தட்டாங்காய் மாறியுள்ளது.

கடமலைமயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட மூலக்கடை, முத்தாலம்பாறை உள்ளிட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தட்டாங்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விதைத்த 40 நாட்களிலேயே அறுவடைக்கு தயாராகிவிடும் என்பதால், இப்பகுதி விவசாயிகள் தட்டாங்காய் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது காய்ப்பிடிப்பு அதிகரித்து விளைச்சல் பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் இப்பகுதிகளில் அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன.



இங்கு விளையும் தட்டாங்காய்களுக்குத் தமிழகத்தை விட அண்டை மாநிலமான கேரளாவில் அதிக வரவேற்பு உள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்த காய்களை உடனுக்குடன் லாரிகள் மூலம் சின்னமனூர் சந்தைக்கு கொண்டு செல்கின்றனர். அங்கிருந்து தினந்தோறும் டன் கணக்கில் தட்டாங்காய்கள் கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தற்போது சந்தையில் 1 கிலோ தட்டாங்காய் 30 ரூபாய் வரை சீரான விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சலும் அமோகமாக இருந்து, விலையும் கை கொடுப்பதால் தங்களுக்கு நல்ல லாபம் கிடைப்பதாகக் கடமலைமயிலை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

# இந்திய விமானிக்கு நன்றி; துணிச்சலான பயணிகளுக்கு பதக்கம்: இஸ்ரேல் ஜனாதிபதி அறிவிப்பு




டெல் அவிவ் அக். 2

இந்திய விமானி மச்சாருக்கு இஸ்ரேல் ஜனாதிபதி நன்றி தெரிவித்து கொண்டார்.

துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை நோக்கி எப்.இசட்.1073 என்ற எண் கொண்ட பிளைதுபாய் விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. அப்போது நடுவானில் விமானிகள் இடையே கடும் சண்டை நடந்தது. ஓமன் நாட்டை சேர்ந்த துணை விமானி திடீரென எழுந்து, தலைமை விமானியாக (கேப்டன்) இருந்த இந்திய விமானி ஸ்மித் மச்சாரை கத்தியால் குத்தி கடுமையாக தாக்கினார். இதில், அவர் படுகாயமடைந்து சரிந்து விழுந்துள்ளார்.

எனினும், கத்திக்குத்து காயங்களுடன் இருந்தபோதும், துணிச்சலாக போராடிய மச்சார், விமானியின் கதவை திறந்து விட்டார். உடனே உள்ளே வந்த சக பயணிகள், பணியாளர்கள் சக விமானியை தடுத்து, கயிற்றை கொண்டு கட்டிப்போட்டனர். இதனால், விமானத்தை தகர்க்கும் சதி முறியடிக்கப்பட்டது. 174 பயணிகள் உயிர்தப்பினர்.

நிலையில், இந்திய விமானி மச்சாருக்கு இஸ்ரேல் ஜனாதிபதி ஈசாக் ஹெர்ஜாக் நன்றி தெரிவித்து கொண்டதுடன், துணிச்சலாக செயல்பட்ட பயணிகளுக்கு பதக்கம் வழங்கவும் பரிந்துரைத்துள்ளார். இதுபற்றி இஸ்ரேல் ஜனாதிபதி ஹெர்ஜாக் கூறும்போது, துணிச்சலாக செயல்பட்ட 4 பயணிகளுக்கு, ஜனாதிபதி பதக்கம் பரிந்துரைக்க விரும்புகிறேன் என்றார். படுகாயத்துடன் இருந்தபோதும், விமானி அறையின் கதவை திறந்து விட்ட மச்சாருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்றும் கூறினார்.

யினோன் ஹேயோன், ஜிவிகா மேன்ஸ், அஸ்ஸாப் ரஜுவான் மற்றும் டாக்டர் ஷோடா மொசியாஷ்விலி ஆகிய துணிச்சலாக செயல்பட்ட 4 பயணிகளிடமும் அவர் பேசினார். இந்த சம்பவத்தில் மாற்று விமானிகள், விமானி அறையில் ஏற்பட்ட சத்தம் கேட்டு எச்சரிக்கை செய்த தலி மேன்ஸ் உள்பட சிறப்பாக செயல்பட்ட அனைவருக்கும் நன்றிகள் என்று தெரிவித்து உள்ளார்.

# தவெக 150 தொகுதி வென்றாலும் கூட்டணி ஆட்சி தொடரும்: ஆதவ் அர்ஜூனா




சென்னை, அக். 2

மதுராந்தகம் தொகுதியில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து தவெக தலைமையிலான மதசார்பற்ற சமூக நீதி வெற்றிக்கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் வைகோ, திருமாவளவன், மாணிக்கம் தாகூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கூறியதாவது:

வன்னி அரசு அமைச்சராக கூடாதா?

திமுக கூட்டணியில் இருந்து விலகுவதற்காக நாங்கள் சோபா கொடுத்தோம் என்கிறார்கள். ஆமாம், சோபா அனுப்பினோம்..ஐயூஎம்எல் 60 ஆண்டு அமைச்சரவையில் கால் மேல் கால் போட்டு அமைச்சராக அமர்வதற்காக சோபா அனுப்பினோம். ஏன் 60 ஆண்டுகளாக உங்கள் குடும்பத்தினர் மட்டும் தான் இருக்க வேண்டுமா? ஏன் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வன்னி அரசு அமைச்சராக கூடாதா? அது வன்னி அரசுக்கான பதவி அல்ல.. அது ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான பிரதிநிதித்துவம். இந்த அரசியல் எல்லாம் உதயநிதிக்கு தெரியாது. 15 எம்பிக்கள் வைத்து கொண்டு 8 அமைச்சர்களை வாங்கினீர்களே? அதே விசிகவும், ஐயூஎம்எல்லும் அமைச்சர் பதவிகள் வாங்கினால், சோபா வாங்கிவிட்டார்கள் என்று பேசுவதா?

மதுராந்தகம், தாராபுரத்தில் வாக்கு பெற யாருக்கு பணம் தர மாட்டோம். எங்கள் தலைவர் மீது நம்பிக்கை உண்டு. திமுக எப்போதும் அதிகாரத்தை பற்றி மட்டுமே யோசிக்கும். திமுக 2வது முறை வென்றதாக வரலாறே இல்லை.

சிறந்த ஆளுங்கட்சியாக திமுக இருந்ததில்லை. ஆட்சி அதிகாரத்தை பெற்று, குடும்ப ஆட்சி மட்டுமே இருக்க வேண்டும் என்ற பிம்பத்தை ஸ்டாலின் உருவாக்கினார். கூட்டணி இல்லாமல் திமுகவால் 10 தொகுதிகளில் வென்று காட்ட முடியுமா ? தவெக 150 தொகுதி வென்றாலும் கூட்டணி ஆட்சி தொடரும்" என்று பேசினார்.

# திருச்செந்தூரில் கடல் சீற்றம்: புனித நீராடிய 5 பக்தர்களின் கால் முறிந்தது

தூத்துக்குடி, அக். 2

திருச்செந்தூரில் அமாவாசை, பவுர்ணமிக்கு முந்தின, பிந்தின சில நாட்களில் கடல் உள்வாங்குவது வாடிக்கையாக நிகழ்கிறது. மேலும் கடல் அலைகளும் அவ்வப்போது சீற்றத்துடன் காணப்படுகிறது. இந்த நிலையில் திருச்செந்தூரில் இன்று அதிகாலையில் கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டன. சுமார் 10 அடி உயரம் வரையிலும் ராட்சத அலைகள் எழும்பி கரையை தாக்கின.

அப்போது கடலில் புனித நீராடிய சில பக்தர்கள் நிலைதடுமாறி விழுந்தனர். அங்கு கடலின் அடியில் பாறைகளாக இருந்ததால், அதில் மோதியதில் 5 பக்தர்களின் கால் எலும்பு முறிந்தது.

இதில் படுகாயமடைந்து தத்தளித்த திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தைச் சேர்ந்த குணசேகரன் (45 வயது), கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சேர்ந்த சரோஜா (42 வயது), திருச்சியைச் சேர்ந்த இலஞ்சியம் (55 வயது), புதுக்கோட்டையை சேர்ந்த ராஜகுமாரி (52 வயது), கிருஷ்ணவேணி (75 வயது) ஆகிய 5 பேரை போலீசார் விரைந்து சென்று மீட்டனர்.

படுகாயமடைந்த 5 பக்தர்களையும் சிகிச்சைக்காக திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# திருக்கோவில் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்வு




சென்னை, அக்.2

திருக்கோவில் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருக்கோவில் பணியாளர்களின் நலன் சார்ந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், இந்து சமய நிறுவனங்களின் பணியாளர் (பணி நிபந்தனைகள்) விதிகள் 2020ல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், ஓய்வு பெறும் திருக்கோவில் பணியாளர்கள் அரசு ஊழியர்களுக்கு இணையாக தங்களது ஈட்டிய விடுப்பை அதிகபட்சமாக 240 நாட்கள் வரை ஒப்படைத்து, அதற்குரிய பணப்பலனைப் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மேலும், திருக்கோவில்களில் பணிபுரியும் பெண் பணியாளர்கள் அரசு ஊழியர்களுக்கு இணையாக 12 மாத மகப்பேறு விடுப்பினைப் பெற்று பயனடைய வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

திருக்கோவில் பணியாளர்களின் பணிநலன், குடும்ப நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புக்கான பணப்பலன் மற்றும் மகப்பேறு விடுப்பு ஆகிய இரு முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் திருக்கோவில் பணியாளர்கள் பெரும் பயனடைவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன்: தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக். 2

நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 99 வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது. அதையொட்டி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

“சிம்மக் குரலாலும் செழுந்தமிழ் உச்சரிப்பாலும் கம்பீர நடையாலும் திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களது பிறந்தநாள்!

இந்நாளில், நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிவாஜி கணேசன் பிறந்த நாள்: தமிழக சபாநாயகர், அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை



சென்னை, அக். 2

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் அவரது மணிமண்டபத்தில் உள்ள உருவ சிலைக்கு தமிழக சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு அரசின் சார்பில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன், சமூக நீதித்துறை அமைச்சர் வன்னிஅரசு ஆகியோர் இன்று (1.10.2026) சென்னை, அடையாறு பகுதியில் உள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்தும், உருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அருண் தம்புராஜ், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள், திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1.10.1928 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே நடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்தார். பேரறிஞர் அண்ணாவால் எழுதப்பட்ட “சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்” என்கிற நாடகத்தில் சிவாஜியாக நடித்தார். அவரது நடிப்புத் திறமையினை பாராட்டி தந்தை பெரியார் “சிவாஜி கணேசன்” என்று பெயர் சூட்டினார்.

பராசக்தி திரைப்படத்தின் மூலம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அறிமுகமாகி தமிழ் திரைப்பட உலகில் 300க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாள திரைப்படத்திலும் நடித்து பிரபலமானார். சிவாஜி கணேசன் “நடிகர் திலகம்”, “நடிப்புச் சக்கரவர்த்தி” என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

இவர் நடித்த கப்பலோட்டிய தமிழன், இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன் உள்ளிட்ட பல வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்படங்கள் காண்போரின் மனதில் இன்றும் நிலைத்து நிற்கிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புத் திறமையை பாராட்டி பத்மஸ்ரீ விருது, பத்மபூஷன் விருது, செவாலியே விருது மற்றும் தாதாசாகேப் பால்கே விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# ‘முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான பணமோசடி புகாரில் முகாந்திரம் இல்லை’ சென்னை ஐகோர்ட்டு



சென்னை, அக்.2

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியை சேர்ந்த தனவிமல் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், கடந்த சட்டமன்ற தேர்தலில் ஆலங்குடி தொகுதியில அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்த தன்னை தொடர்பு கொண்ட முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், தேர்தல் செலவுகளை செய்யக்கூடிய தகுதியை நிரூபிக்க 5 கோடி ரூபாய் தரும்படி வலியுறுத்தியதாகவும், வேட்பாளர் பட்டியல் அறிவித்த பிறகு அந்த பணத்தை திருப்பி தந்து விடுவதாக உறுதி அளித்ததாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதன்படி 4 கோடி 50 லட்சம் ரூபாய் பணத்தை சி.விஜயபாஸ்கரிடம் ஒப்பந்ததாரர் மூலமாக கொடுத்ததாகவும், வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு தேர்தல் செலவுகளுக்காக அந்த பணத்தை திருப்பி கேட்டபோது 50 லட்சம் ரூபாயை மட்டும் சி.விஜயபாஸ்கர் திருப்பி கொடுத்தார் எனவும், இது தொடர்பாக காவல்துறையிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி லட்சுமி நாராயணன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, ஏற்கனவே ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் காவல்துறை தரப்பில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில், மனுதாரரின் புகார் குறித்து புதுக்கோட்டை டி.எஸ்.பி. விசாரணை நடத்தியதாகவும், அந்த விசாரணையில் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்கு எதிரான புகாரில் முகாந்தரம் இல்லை என்று தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காவல்துறையின் அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான பணமோசடி புகாரில் முகாந்திரம் இல்லை என்று தெரிவித்து, புகார் குறித்து விசாரணைக்கு உத்தரவிடக்கோரி அ.தி.மு.க. வேட்பாளர் தாக்கல் செய்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, அக். 2

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

“மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக (i) வா.வெ.சாய்பிரணீத், இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் (ii) ஜெ.ராமன், காவல் ஆய்வாளர், தனிப்பிரிவு, திருச்சி மாவட்டம், (iii) க.சண்முகம், காவல் உதவி ஆய்வாளர், விக்கிரவாண்டி காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம், (iv) திரு. எ. கருணாகரன், தலைமைக் காவலர் 1674, திருப்பாதிரிபுலியூர் காவல் நிலையம், கடலூர் மாவட்டம் மற்றும் (v) பெ.செல்வம், தலைமைக் காவலர் 381, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கள்ளக்குறிச்சி மாவட்டம் (அயற்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, விழுப்புரம் மண்டலம்) ஆகியோருக்கு 2026ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இவ்விருது, முதல் அமைச்சரால் 2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/ ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 நாட்களில் 3 சுரங்கப்பணிகள் நிறைவு: சென்னை மெட்ரோ ஹாட்ரிக் சாதனை!




சென்னை, அக். 2

சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்டத் திட்டத்தில் 3 நாட்களில் 3 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பணிகளை நிறைவு செய்து ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ நிர்வாகம் வெளியிடுட்ள்ள எக்ஸ்தளபதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இரண்டாம் கட்டத் திட்டத்தில் மற்றொரு முக்கிய மைல்கல்லாக, வழித்தடம் 3ல் “அடையாறு” சுரங்கம் தோண்டும் இயந்திரம் 915 மீட்டர் நீளத்தில் சுரங்கம் அமைக்கும் பணியை முடித்து ஆர்.கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்து. இந்த சுரங்கம் தோண்டும் பணி கடந்த ஆண்டு டிசம்பர் 29 அன்று தொடங்கப்பட்டு 277 நாட்களில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனையின் மூலம், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இரண்டாம் கட்டப் பணிகளின் கீழ் தொடர்ந்து மூன்று நாட்களில் 3 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களின் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது:

29 செப்டம்பர் 2026: வழித்தடம் 3ல் “காவேரி” சுரங்கம் தோண்டும் இயந்திரம் கீழ்ப்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. 30 செப்டம்பர் 2026: வழித்தடம் 5ல் “மருதம்” சுரங்கம் தோண்டும் இயந்திரம் வில்லிவாக்கம் பேருந்து நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. 1 அக்டோபர் 2026: வழித்தடம் 3ல் “அடையாறு” சுரங்கம் தோண்டும் இயந்திரம் ஆர்.கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி. அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), பொது மேலாளர் ஆண்டோ ஜோஸ் மெனாச்சேரி (சுரங்கப்பாதை கட்டுமானம்), பொது ஆலோசகர் நிறுவனத்தின் குழுத் தலைவர் டோனி பார்ச்செல், எல்&டி நிறுவனத்தின் திட்ட இயக்குநர் லட்சுமி பிரசாத் வெசாங்கி மற்றும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், பொது ஆலோசகர் நிறுவனம் மற்றும் ஒப்பந்தாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வழித்தடம் 3ல் கெல்லிஸ் முதல் தரமணி வரையிலான 12 கி.மீ நீளமுள்ள சுரங்கப்பாதை பகுதியின் கட்டுமானப் பணிகள் எல்&டி நிறுவனத்தால் 8 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராயப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையம் முதல் ஆர்.கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையம் வரையிலான சுரங்கப்பாதை பணிகள், “பவானி” மற்றும் “அடையாறு” ஆகிய இரண்டு சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி செப்டம்பர் 2024ல் தொடங்கப்பட்டன. இதில் Upline பாதையில் “பவானி” சுரங்கம் தோண்டும் இயந்திரம் 13 அக்டோபர் 2025 அன்று தனது பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த நிலையில், Downline பாதையில் “அடையாறு” சுரங்கம் தோண்டும் இயந்திரம் இன்று 01.10.2026 தனது பணியை நிறைவு செய்துள்ளது.

இப்பணியின் போது, “அடையாறு” சுரங்கம் தோண்டும் இயந்திரம் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பீட்டர்ஸ் பாலம், பணியாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம் (EPFO Building), ஆந்திரா பள்ளி மற்றும் பல்வேறு கடைகள் உட்பட பல முக்கிய மற்றும் நெரிசலான கட்டடங்களுக்கு அடியில், சுமார் 9 முதல் 13 மீட்டர் ஆழத்தில் களிமண் கலந்த மணல் பரப்பில் பாதுகாப்பாகச் சுரங்கம் அமைக்கும் பணியை மேற்கொண்டது.

சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் முகப்பு பகுதியில் மொத்தம் 11 முறை பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புற நெரிசல் மற்றும் வழித்தடத்தில் பல்வேறு கட்டடங்கள் நிறைந்த சவாலான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், தரைப்பகுதியில் எவ்விதப் பாதிப்போ அல்லது சுற்றியுள்ள கட்டடங்களுக்கு எந்தவொரு சேதமோ இன்றி இச்சாதனை வெற்றிகரமாக எட்டப்பட்டது.

“அடையாறு” சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் இந்த வெற்றிகரமான வருகை, TU02 ஒப்பந்தத்தின் கீழ் எட்டப்பட்ட 10வது சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் வெற்றியாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 தொகுதிகள் இடைத் தேர்தலுக்கு தடை விதிக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு தள்ளிவைப்பு



சென்னை அக். 2

தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ள திருச்சி கிழக்கு, அம்பாசமுத்திரம், பெருந்துறை, கரூர், விராலிமலை ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில் நெல்லையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, தேர்தல் வழக்கில் 2வது இடம் பிடித்த வேட்பாளரை வெற்றிப் பெற்றவராக ஐகோர்ட்டு அறிவிக்கும்பட்சத்தில், இடைத்தேர்தல் ஒருவர் வெற்றி பெறும்போது, அது மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே, இந்த 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து கடந்த ஜூலை 10ந்தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கில் ஏற்கெனவே மனுதாரர், எதிர்மனுதாரரான விஜய் உள்ளிட்டோர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தநிலையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில், தேர்தல் நடத்துவது தொடர்பாக ஐகோர்ட்டு பிறப்பிக்கும் உத்தரவுகளை அமல்படுத்த தயாராக உள்ளோம். இடைத்தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை. ஆறு மாத கால அவகாசம் உள்ளது. தேர்தல் ஆணையம் முடிவு எடுப்பதற்கு முன்பே மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

விஜய் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிடுகையில், திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு எதிரான தேர்தல் வழக்குகள் நிலுவையில் இருப்பதை சுட்டிக் காட்டி, இடைத்தேர்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும்'' என்று வாதிடப்பட்டது. இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# கதர் விற்பனைக்கு புதிய உத்வேகம்: மேம்படுத்தப்பட்ட இணையதளம் தொடக்கம்




சென்னை, அக். 3

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் கைத்தறித் துறையின் சார்பில் சென்னை ஹவுஸ் கதர் அங்காடியில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகளின் 158 வது பிறந்தநாள்விழாவில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு செயலாளர் ஆர்.லில்லி, தீபாவளி சிறப்பு கதர் விற்பனை மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட வணிக இணையதளத்தை தொடங்கி வைத்து, திறன் மிகு நெசவாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தேசப்பிதா அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை கதர் தொழிலுக்கு மகுடம் சூட்டும் நாளாகவும், கதர் சிறப்பு விற்பனை தொடக்க விழாவாகவும் ஆண்டுதோறும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

மேலும், கதர் உற்பத்தித் தொழிலினை தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்கச் செய்ய வேண்டும் என்பதால் கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களுக்கு அரசால் 30 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடி ஆண்டு முழுவதும் அனுமதிக்கப்படுகிறது. இதனால் விற்பனை அதிகரித்து, அதற்கு ஈடாக உற்பத்தி அதிகரித்து, நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதல்அமைச்சர், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நன்னாளான இன்று (02.10.2026) கதர் கிராமப் பொருட்களை மாணவ மாணவிகள், இளைஞர்கள், ஆசிரியர் பெருமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் வாங்கி பயன்பெற வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அண்ணல் காந்தியடிகளின் 158வது பிறந்த நாள் விழா, தீபாவளி சிறப்பு கதர் விற்பனை தொடக்க விழா, காதி வாரிய நெசவாளர்கள் மற்றும் கைத்தறித் துறையின் திறன்மிகு நெசவாளர்களுக்கு விருது வழங்கும் விழா ஆகியவை இன்று சென்னை ஹவுஸ் கதர் அங்காடியில் நடைபெற்றன. இவ்விழாக்களில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு செயலாளர் திருமதி ஆர். லில்லி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், தீபாவளி சிறப்பு கதர் விற்பனை மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட வணிக இணையதளத்தை (www.tnkvib.com) தொடங்கி வைத்து, சிறந்த கதர் நூற்பாளர், சிறந்த கதர் நெசவாளர் மற்றும் சிறந்த பட்டு நெசவாளர் ஆகிய 3 கைவினைஞர்களுக்கு, சிறப்பாகவும், நேர்த்தியாகவும் அதிகளவிலும் கதர் உற்பத்திப் பணியை செய்தமைக்காக ஊக்கப் பரிசாக தலா ரூ.25,000/க்கான 3 காசோலைகள் மற்றும் பாராட்டு கேடயங்கள் வழங்கியும், புதிய கதர் கிராமத் தொழில் பொருட்களை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியும் மற்றும் கைத்தறித்துறையின் 60 திறன்மிகு நெசவாளர்களுக்கு 2025 26 ஆண்டுக்கான முதல் பரிசு ரூ.25,000/, இரண்டாம் பரிசு ரூ.15,000/ மற்றும் மூன்றாம் பரிசு ரூ.10,000/ குரிய விருதுகள் வழங்கியும் விழாவை சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் முனைவர் சீ. சுரேஷ்குமார், கைத்தறித் துறை இயக்குநர் பி. உமாமகேஸ்வரி, அரசு உயர் அலுவலர்கள், கதர் வாரியப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸ்திரேலியாவில் பழ.நெடுமாறன் மகன் காலமானார்

சென்னை, அக். 3

உலகதமிழர்பேரமைப்பின்தலைவர்பழ.நெடுமாறனின் மகன் மாணிக்கம் நெடுமாறன் (வயது 57) ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இளம் வயதிலேயே உலக இன்பங்களை துறந்து புத்த மதத்தை தழுவிய மாணிக்கம் நெடுமாறன், ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் ஒரு புத்த துறவியாக வாழ்ந்து வந்தார். இந்த நிலையில், கடந்த சில காலமாக அவர் கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் பலன் அளிக்கவில்லை. நேற்று காலை இந்திய நேரப்படி 8.45 மணியளவில் மாணிக்கம் நெடுமாறன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது இறுதிச்சடங்குகள் புத்த மத வழக்கப்படி மெல்பர்ன் நகரிலேயே நடைபெற உள்ளது.

மகனின் இறுதிச்சடங்கில் பங்கேற்க பழ.நெடுமாறனும், அவரது மனைவியும் ஆஸ்திரேலியா செல்ல முடிவு செய்தனர். ஆனால், பழ.நெடுமாறனின் பாஸ்போர்ட் முடக்கப்பட்டிருப்பதால் அவராலும், அவரது மனைவியாலும் மகனின் இறுதி சடங்கில் பங்கேற்க இயலவில்லை என உலகத் தமிழர் பேரமைப்பு மிகுந்த வேதனையுடன் தெரிவித்துள்ளது.



பெற்ற மகனின் இறுதிச்சடங்கிற்கு கூட செல்ல முடியாமல், அவனது உடலைக் கூட நேரில் பார்க்க முடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்ட பழ.நெடுமாறனின் நிலை, தமிழ் உணர்வாளர்கள் மற்றும் அரசியல் வட்டாரத்தில் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த துயர செய்தியை உலக தமிழர் பேரமைப்பு மிகுந்த வேதனையுடன் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

மாணிக்கம் நெடுமாறனின் மறைவு செய்தி அறிந்த தமிழகத்தைசேர்ந்தபல்வேறுஅரசியல்கட்சித்தலைவர்கள், தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள் தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

# தமிழகத்தில் 'வருகையில்லா பத்திரப்பதிவு' 1 லட்சத்தை தாண்டி சாதனை!



சென்னை, அக். 3

தமிழகத்தில் பொதுமக்கள் அலையாமல், வீட்டிலிருந்தபடியே பத்திரப்பதிவு செய்யும் வகையில் கொண்டு வரப்பட்ட 'வருகையில்லா ஆவணப்பதிவு' திட்டம் 1 லட்சத்தை கடந்து சாதனை படைத்துள்ளது.

தமிழக பதிவுத்துறையில் இடைத்தரகர்கள் நடமாட்டத்தை தவிர்க்கவும், பொதுமக்களின் நேரத்தை மிச்சப்படுத்தவும் 'வருகையில்லா ஆவணப்பதிவு' என்ற புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தை கடந்த ஆகஸ்டு மாதம் 17ஆம் தேதி தமிழக முதல்அமைச்சர் விஜய் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

முதற்கட்டமாக, புதிய மனை பிரிவுகளின் முதல் விற்பனை மற்றும் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் முதல் விற்பனை ஆகிய இரண்டு வகை ஆவணங்களுக்கு இந்த ஆன்லைன் பத்திரப்பதிவு முறை கட்டாயமாக்கப்பட்டது.

இத்திட்டம் பொதுமக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. இது தொடர்பாக தமிழக பதிவுத்துறை தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

"வருகையில்லா ஆவணப் பதிவுத் திட்டம் தொடங்கப்பட்ட ஆகஸ்டு 17ஆம் தேதி முதல் செப்டம்பர் 30ஆம் தேதி வரையிலான கடந்த 44 நாட்களில் மட்டும் மொத்தம் 1,00,134 ஆவணங்கள் இந்த முறையில் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

# திருநெல்வேலியில் 314 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்: 2 பேர் கைது



திருநெல்வேலி, அக். 3

திருநெல்வேலி மாவட்ட போலீசாரின் தீவிர நடவடிக்கையால் நேற்று ஒரே நாளில் சுமார் 314 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில், ஏர்வாடியில் இருந்து நாங்குநேரி செல்லும் ரோட்டில் உள்ள விளையாட்டு மைதானம் அருகே சோதனை செய்தனர்.

அந்த சோதனையில் வள்ளியூரை சேர்ந்த கண்ணன் (வயது 53) மற்றும் மறுகால்குறிச்சியை சேர்ந்த ஐயப்பன்(40) ஆகிய 2 பேரும் சேர்ந்து சுமார் 314 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்திருந்தது கண்டறியப்பட்டது. இதுகுறித்து ஏர்வாடி பொறுப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் சுதா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, இந்த சம்பவத்தில் தொடர்புடைய 2 பேரையும் கைது செய்து, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை கைப்பற்றி உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

# தொடர் விடுமுறை; சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு படையெடுக்கும் மக்கள் திணறும் ஜி.எஸ்.டி. சாலை

சென்னை, அக். 3

காந்தி ஜெயந்தி மற்றும் வார இறுதி நாட்களை முன்னிட்டு தொடர் விடுமுறை விடப்பட்டுள்ளதால், தாம்பரம் மற்றும் பெருங்களத்தூர் ஜி.எஸ்.டி.சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். தொடர் விடுமுறை காரணமாக சென்னையில் இருந்து ஏராளமானவர்கள் தென் மாவட்டங்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக நேற்று இரவு கிளாம்பாக்கம் பேருந்து நிலையில் கடுமையான பயணிகள் கூட்டம் அலைமோதியது. அதேபோல் இன்றும் கிளாம்பாக்கத்தில் இருந்து அதிக அளவு பயணிகள் சொந்த ஊர்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். கார்களிலும், இருசக்கர வாகனத்தில் ஏராளமானவர்கள் ஜி.எஸ்.டி. சாலையில் வருவதன் காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசல் காலையில் இருந்து நீடிக்கிறது. பெருங்களத்தூர், வண்டலூர், கிளாம்பாக்கம் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் தற்போது நீடித்து வருகிறது. இருசக்கர வாகனத்தில் வருவோர் கடுமையான வெயிலில் அவதிப்பட்டு வருகிறார்கள். தொடர்ந்து அந்த பகுதியில் வந்து அதிக அளவு வாகனங்கள் ஒரே நேரத்தில் வந்து கொண்டிருப்பதன் காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. விடுமுறை தினத்தை கொண்டாடுவதற்காக வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு ஏராளமான பொதுமக்கள் படையெடுத்து வருகின்றனர். இதன் காரணமாகவும் அந்த பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பெருங்களத்தூர், வண்டலூர், கிளாம்பாக்கம் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பணிகளில் போக்குவரத்து போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

# காந்தி ஜெயந்தி: தூத்துக்குடி மாவட்டத்தில் மதுபானம் விற்ற 38 பேர் கைது; 1,495 பாட்டில்கள் பறிமுதல்




தூத்துக்குடி, அக். 3

தூத்துக்குடி மாவட்டத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு இதுவரை சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 38 பேரை கைது செய்து, 15 பேரை சிறையில் அடைத்ததோடு, அவர்களிடமிருந்து 1,495 மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தமிழ்நாடு அரசு அனைத்து டாஸ்மாக் கடைகளுக்கும் முழு கடையடைப்பு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி முழு கடையடைப்பின் போது சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிவபிரசாத் உத்தரவிட்டார்.

அதன் பேரில் தூத்துக்குடி மாவட்டம், ஏரல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வாழவல்லான் பகுதியில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டபோது சந்தேகப்படும்படியான நபர்கள் 2 பேரை பிடித்து சோதனை செய்தனர். அப்போது அவர்கள் சட்ட விரோதமாக விற்பனை செய்ய மதுபாட்டில்களை பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இது தொடர்பாக ஏரல் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஆதாம்அலி வழக்குப்பதிவு செய்து சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஏரல், சிவகளை பகுதியைச் சேர்ந்த கணபதி மகன் வத்திராப்பு (வயது 49) மற்றும் செபத்தையாபுரம் பகுதியைச் சேர்ந்த ஜேசுராஜ் மகன் அந்தோணி ஆலோசனை பிரிட்டன்(38) ஆகிய 2 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 698 மது பாட்டில்களை பறிமுதல் செய்தார்.

இதே போல் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து உட்கோட்ட டி.எஸ்.பி.க்கள் தலைமையில் அந்தந்த உட்கோட்ட காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார் இதுவரை சட்டவிரோத மதுபான விற்பனையை தடுக்கும் பொருட்டு தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர். அதில் மாவட்டத்தில் அனைத்து உட்கோட்டங்களிலும் மொத்தம் 35 வழக்குகள் பதிவு செய்து 38 பேர் கைது செய்யப்பட்டு 15 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் அவர்களிடமிருந்து மொத்தம் 1,495 மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# சென்னை: வேளாண் விளைபொருட்கள் ஏற்றுமதி என்ற பெயரில் ரூ.1,417 கோடி மோசடி 2 பேர் கைது




சென்னை, அக். 3

வேளாண் விளைபொருட்கள் ஏற்றுமதி என்ற பெயரில் 35,759 முதலீட்டாளர்களிடம் ரூ.1,417 கோடி மோசடி செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கில், சென்னையை சேர்ந்த தனியார் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவன உரிமையாளர்கள் நவீன் குமார், முத்துசெல்வம் ஆகியோரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதில் 100க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் மூலம் பணப் பரிவர்த்தனை நடந்துள்ளதாகவும், நிறுவனத்தின் கணக்குகளில் 719 கோடி ரூபாய் செலுத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. தொடர்ந்து இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# ஆசிய விளையாட்டுப் போட்டி: வெண்கலப் பதக்கம் வென்ற தமிழக படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணனுக்கு முதல்அமைச்சர் விஜய் வாழ்த்து



சென்னை, அக். 3

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், படகோட்டப்போட்டி பெண்கள் டிங்கி பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணனுக்கு வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதல்அமைச்சர் ச. ஜோசப் விஜய் இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் படகோட்டப்போட்டி பெண்கள் டிங்கி பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணனுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது இச்சாதனையை பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். திறமை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால் அவர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.

படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணனின் வெற்றி, தமிழ்நாட்டின் இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும். எதிர்காலத்திலும் அவர் பல வெற்றிகளை பெற்று புதிய சாதனைகளை படைத்திட வாழ்த்துகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அலுவலர்களுக்கான நிலுவை சம்பளத்தை வழங்க வேண்டும்' எடப்பாடி பழனிசாமி



சென்னை, அக். 3

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அலுவலர்களுக்கான நிலுவை சம்பளத்தை வழங்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ் நாடு முதலமைச்சராக இருந்தபோது, 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'ஊரகப் புத்தாக்கத் திட்டம்' 2021ல் திமுக ஆட்சியில் 'வாழ்ந்து காட்டுவோம் திட்டமாக' பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் தமிழ் நாடு முழுவதிலும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சுமார் 500க்கும் மேற்பட்ட மேற்பார்வை அலுவலர்களும், சுமார் 3900க்கும் மேற்பட்ட தளப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த 400க்கும் மேற்பட்ட அலுவலர்கள் அனைவரும் பட்டதாரிகள் ஆவார்கள். அதில் 90% பணியாளர்கள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள். இவர்கள் 2005ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, அதாவது சுமார் 10 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரை, தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுடைய முக்கிய பணி கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு இலவசப் பயிற்சிகளும், துவக்க செயல்பாடுகளுக்காக, துவக்க மானிய நிதி வழங்குதல், கிராமப் புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும், நலிவுற்றோருக்கும் அடையாள அட்டை மற்றும் சிறப்பு உதவிகள் வழங்குதல், மக்கள் தொகை கணக்கெடுப்பில் உதவுதல், அடித்தள மக்கள் அமைப்புகளை உருவாக்குதல், இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் நேரடி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித்தருதல், ஊராட்சிகளில் இசேவைமையங்களை அமைத்தல், மைக்ரோ கடன் திட்டங்கள் மூலம் கடன் வழங்கி தொழில் முனைவரை உருவாக்குவது உள்ளிட்ட அரசின் பல கிராமப்புற திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு வழங்கிய மைக்ரோ கடனில் சுமார் 95 சதவீதத்திற்கு மேல் வெற்றிகரமாக திருப்பிச் செலுத்த வைத்துள்ளனர். தமிழ் நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் இவர்கள் சுமார் 6.50 லட்சம் பயனாளிகளை நேரடியாகத் தொடர்புகொண்டு பணியாற்றி வருகின்றனர் என்று தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். 2019ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காலத்தில் இவர்களுடைய பணி சிறப்பாக அமைந்தது. மேலும், இவர்கள் மகளிர் திட்டப் பணிகளையும் கூடுதலாக கவனித்து வருதாக தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

'வாழ்ந்து காட்டுவோம் திட்டம்' கட்டம் 1ல், பகுதி 1.0 மற்றும் பகுதி 2.0 ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண் 40, நாள் 13.2.2026ன்படி வாழ்ந்து காட்டுவோம் திட்டம் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டது. அதன்படி வாழ்ந்து காட்டுவோம் கட்டம் (பேஸ்) 2, பகுதி 3.0 முன்மொழியப்பட்டது.

அரசாணை எண் 40ன்படி, தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டே இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், அவர்களின் ஊதியத்திற்காக போதுமான நிதி ஒதுக்கப்பட்டதுடன், திட்ட அறிக்கை இறுதி செய்யும் வரை பழைய பணியாளர்களே தொடர வேண்டும் என்றும், புதிய பணியாளர்களை நியமிக்கக்கூடாது என்றும், இப்பணியாளர்களை மகளிர் திட்டத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று இப்பணியாளர்கள் தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களாக ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை என்றும், மாநில அளவில் பணிபுரிந்து வந்த அனைவரையும் 23.9.2026 முதல் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, தங்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கக் கோரியும், தாங்கள் பணிபுரிந்து வரும் மாதங்களுக்கு வழக்கம்போல் தொடர்ந்து சம்பளம் வழங்க வேண்டும் என்றும், மேலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பகுதி 3.0க்கு விரைந்து ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்த வேண்டி, இவர்கள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழ் நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்/வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் 10 முதல் 18 ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றிய காரணத்தால் அரசுப் பணிகளில் சேர்வதற்கான வயது வரம்பை இவர்கள் கடந்துவிட்டனர்.

மேலும், இத்துறையிலேயே தங்களது பெரும்பகுதியை கழித்துவிட்டதால், மாற்றுப் பணிகளுக்குச் செல்ல முடியாத இக்கட்டான சூழல் இவர்களிடையே நிலவுகிறது. அரசு, இவர்களின் இச்சூழ்நிலையை கருத்திற்கொண்டு, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் போதுமான பயிற்சி பெற்றுள்ள இவர்களைத் தொடர்ந்து பணி இடைவெளியின்றி 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3.0ல்' பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென்றும் அல்லது மகளிர் திட்டத்தில் இவர்களை இணைத்து பணிப் பாதுகாப்பு வழங்குவதுடன், இவர்களுக்கு வழங்க வேண்டிய இரண்டு மாத சம்பளத்தை உடனடியாக வழங்கிட த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
03.10.2026

# மதுரை: ரூ.1 கோடி மதிப்புள்ள திருஞானசம்பந்தர் சிலை காரில் கடத்தல் 3 பேர் கைது



மதுரை, அக். 3

மதுரையில் ரூ.1 கோடி மதிப்புள்ள திருஞானசம்பந்தர்சிலையை காரில் கடத்தி சென்ற 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

மதுரை வண்டியூர் சேட்டு சில்வர் கம்பெனி அருகே உள்ள எட்டையா தோப்பில் இருந்து திருஞானசம்பந்தர் உலோகசிலைகாரில்கடத்தப்பட்டுள்ளதாக மதுரை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் மதுரைதிருமங்கலம் 4 வழிச்சாலை சந்திப்பு அருகே சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தங்களுக்கு கிடைத்த குறிப்பிட்ட பதிவெண் கொண்ட கார் வந்தது. அந்த காரை நிறுத்தி போலீசார் சோதனை நடத்தினார்கள். அந்த காரில் 3 அடி உயரம், 52 கிலோ எடை கொண்ட திருஞானசம்பந்தர் உலோக சிலை இருந்தது. அந்த சிலையை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த சிலையை காரில் கடத்தி வந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் அவர்கள் மதுரை மாவட்டம் பங்கஜம் காலனியை சேர்ந்த ஜெயவேலன் (48 வயது), கீழ் அண்ணாதோப்பு பகுதியை சேர்ந்த பாண்டியராஜன் (37 வயது), நியூ எல்லீஸ் நகரை சேர்ந்த அக்பர் (52 வயது) ஆகிய 3 பேர் என்பது தெரியவந்தது. விசாரணைக்கு பின்னர் அவர்கள் 3 பேரும் மதுரை மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு விருதுநகர் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைப்பற்றப்பட்டுள்ள திருஞானசம்பந்தர் சிலை 3 அடி உயரம், 52 கிலோ எடையில் இருப்பதாகவும், 15ம் நூற்றாண்டைசேர்ந்தவிஜயநகரகாலகட்டம் மற்றும் கலைப்பாணியை கொண்டுள்ளதாகவும், சுமார் ரூ.1 கோடி மதிப்பு இருக்கும் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த சிலை எந்த கோவிலில் இருந்து திருடப்பட்டது என்பது குறித்து போலீசார் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சிலை கடத்தல் கும்பலை கைது செய்துள்ள போலீசாருக்கு டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு கூடுதல் டி.ஜி.பி. கல்பனா நாயக், ஐ.ஜி. அனில்குமார் கிரி, போலீஸ் சூப்பிரண்டு சந்திரசேகரன் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# ரவுடி கொலை வழக்கில் கைதான 10 பேரை காவலில் எடுத்து விசாரணை



புதுச்சேரி, அக். 3

புதுச்சேரியில் ரவுடி கொலை வழக்கில் கைதான 10 பேரை போலீசார் காவலில் எடுத்து விசாரணைநடத்திவருகின்றனர்.

புதுச்சேரி பாக்குமுடையான்பேட் பகுதியை சேர்ந்தவர் ஆனந்த் என்ற முண்டக்கண்ணு ஆனந்த் (வயது 31). ரவுடியான இவர், கடந்த 18ந் தேதி லாஸ்பேட்டை கிழக்கு கடற்கரை சாலை சிவாஜி சிலை அருகே ஸ்கூட்டரில் சென்று கொண்டு இருந்தார்.

அப்போது மோட்டார்சைக்கிளில் வந்த கும்பல் பயங்கர ஆயுதங்களால் வெட்டி சாய்த்தது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இது குறித்து லாஸ்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கில் கருவடிக்குப்பத்தை சேர்ந்த சந்துரு (26), லட்டு குமார் (25), நாகராஜ் (26), சந்தோஷ் (23), முன்னாள் ஐ.ஆர்.பி.என். போலீஸ்காரர் ஜெகன், எட்வின்பால் உள்ளிட்ட 10 பேரை கைது செய்து காலாப்பட்டு சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையே சிறையில் அடைக்கப்பட்டுள்ள 10 பேரையும் போலீசார் காவலில் எடுத்து விசாரிக்க முடிவு செய்தனர். இதற்காக புதுச்சேரி கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர்.

தொடர்ந்து 10 பேரையும் 3 நாட்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்த கோர்ட்டு அனுமதி அளித்தது. அதன்பேரில் லாஸ்பேட்டை போலீசார் 10 பேரையும் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (03.10.2026)




குடும்பம் மற்றும் பண விஷயங்களில் நல்ல முன்னேற்றம். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும்.




புதிய முயற்சிகள், கலை மற்றும் படைப்பாற்றல் சார்ந்த விஷயங்களில் வாய்ப்புகள் கிடைக்கலாம். உறவுகளில் பழைய பிரச்சினைமீண்டும்பேசப்படலாம்.




பேச்சுவார்த்தை மற்றும் தொடர்புகளில் சாதகமான நாள். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும்.




பணவரவு இருந்தாலும் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். வேலை விஷயங்களில் பொறுமை தேவை.




குழுவாகச் செயல்படுவதால் நல்லபலன். உங்கள்திறமைக்கு அங்கீகாரம் கிடைக்க வாய்ப்பு.




வேலைப்பளு அதிகரிக்கலாம்; திட்டமிட்டு செயல்பட்டால் முன்னேற்றம்.




பண விஷயங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நாள். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.




முதலீடு அல்லது பெரிய பண முடிவுகளில்அவசரம்வேண்டாம். வேலை மற்றும் குடும்பத்தில் மதிப்பு அதிகரிக்கலாம்.




பழைய பொறுப்புகளை முடிப்பதில் கவனம் செலுத்துங்கள். உறவுகளில் நல்ல புரிதல் ஏற்படும்.




செலவுகள் மற்றும் குடும்ப/சொத்து தொடர்பான விஷயங்களில் நிதானம் தேவை.




காதல் மற்றும் உறவுகளில் மனம் விட்டுப் பேச நல்ல நாள். புதிய யோசனைகளை செயல்படுத்தலாம்.




பணத்தை சேமிப்பதில் கவனம் செலுத்தவும். மனக்குழப்பத்தைத் தவிர்த்து வேலைகளில் தெளிவாகச் செயல்படுங்கள்

# கோவிலில் பொங்கல் வைத்த போது சோகம்: கதம்ப வண்டுகள் கொட்டி 25 பேர் படுகாயம்..!



உசிலம்பட்டி, அக். 3

கதம்ப வண்டுகள் கொட்டியதில் 25 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உசிலம்பட்டி அருகே மொண்டிக்குண்டு கிராமத்திலுள்ள கன்னிமார் கோவிலில் புரட்டாசி திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் நேற்று பொங்கல் வைத்து கொண்டிருந்தனர். பொங்கல் வைத்த போது அடுப்பில்இருந்து வெளியேறிய புகையால் கதம்ப வண்டுகள் கூட்டில் இருந்து வெளியேறியது.

பின்னர், அங்கு சுற்றி இருந்தவர்கள் அனைவரையும் சரமாரியாக கொட்டியது. இதில் பலத்த காயமடைந்த 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகினறனர்.

இது குறித்து தகவல் அறிந்த உத்தப்பநாயக்கனுார் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து காயமடைந்தவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தூத்துக்குடியில் தண்ணீர் லாரி மீது ஆம்னி பஸ் மோதி விபத்து: ஒருவர் உயிரிழப்பு, 6 பேர் படுகாயம்

தூத்துக்குடி, அக். 3

தூத்துக்குடியில் அரசரடி டோல்கேட் அருகே நின்று கொண்டிருந்த தண்ணீர் லாரி மீது ஆம்னி பஸ் மோதிய விபத்தில் மாற்று டிரைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

பெங்களூரில் இருந்து திருச்செந்தூருக்கு ஒரு தனியார் ஆம்னி பஸ் நேற்று இரவு புறப்பட்டுள்ளது. இந்த பேருந்து இன்று காலை 9.30 மணி அளவில் மேல அரசரடி டோல்கேட் அருகே வரும்போது சாலையோரம் நின்று கொண்டிருந்த தண்ணீர் லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தகோர விபத்தில் பேருந்தின் முன்பக்கம் அப்பளம் போல் நொறுங்கியது. மேலும் பேருந்தின் முன் சீட்டில் அமர்ந்திருந்த மாற்று டிரைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் பஸ்ஸில் பயணம் செய்த 6 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இடிபாடுகளுக்குள் சிக்கி படுகாயம் அடைந்தவர்களை மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக புதியம்புத்தூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சார்லபள்ளி திருவண்ணாமலை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம்..!



சென்னை, அக். 3

பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை காலத்தில் அதிகரிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு சார்லபள்ளி திருவண்ணாமலை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம் இயக்கப்படுகின்றன.

தெற்கு மத்திய ரெயில்வே சார்பில், பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையையொட்டி பயணிகளின் கூடுதல் கூட்டத்தை சமாளிக்கும் வகையில், "தேவைப்படும் போது இயக்கப்படும்" (Trains on Demand) சிறப்பு ரெயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சார்லபள்ளி திருவண்ணாமலை எக்ஸ்பிரஸ் சிறப்பு ரெயில் (ரெயில் எண் 07003) அக்டோபர் 6, 13, 20, 27 மற்றும் நவம்பர் 3, 10, 17 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். இந்த ரெயில் சார்லபள்ளியில் இருந்து மதியம் 2.20 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் காலை 8 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும். மறுமார்க்கத்தில், திருவண்ணாமலை சார்லபள்ளி எக்ஸ்பிரஸ் சிறப்பு ரெயில் (ரெயில் எண் 07004) அக்டோபர் 7, 14, 21, 28 மற்றும் நவம்பர் 4, 11, 18 ஆகிய தேதிகளில் இயக்கப்படும். இந்த ரெயில் திருவண்ணாமலையில் இருந்து இரவு 8 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் பிற்பகல் 2.30 மணிக்கு சார்லபள்ளி சென்றடையும்.

# குத்துச்சண்டையில் இந்தியாவுக்கு மீண்டும் தங்கம் வரலாற்று சாதனை படைத்த பர்வீன் ஹூடா



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவு குத்துச்சண்டை இறுதிப்போட்டியில் இந்தியாவின் பர்வீன் ஹூடா, சைனீஸ் தாய்பேவைச் சேர்ந்த முன்னாள் உலக சாம்பியன் சென் நியென்சின்ஜ 32 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றார்.

இந்தவெற்றியின்மூலம், ஆசியவிளையாட்டுப்போட்டிகளின் குத்துச்சண்டை வரலாற்றில் தங்கப் பதக்கம் வென்ற 3வது இந்திய வீராங்கனை என்ற பெருமையை பர்வீன் ஹூடா பெற்றுள்ளார். மேலும், நடப்பு ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா வென்றுள்ள 13வது தங்கப் பதக்கம் இதுவாகும்.

கடந்த ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியதைத் தொடர்ந்து, அவர் வென்ற வெண்கலப் பதக்கத்தை இழக்க நேரிட்டது. அந்தப் பின்னடைவுக்குப் பிறகு மீண்டும் களத்திற்கு திரும்பிய பர்வீன், தற்போது ஆசிய விளையாட்டில் தங்கப் பதக்கத்தை வென்று தனது திறமையை நிரூபித்துள்ளார்.

# ஆசிய விளையாட்டு: 'செபக்டக்ரா'வில் இந்தியாவுக்கு முதல் பதக்கம்



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் செபக்டக்ரா ஆண்கள் குவாட்ரண்ட் பிரிவில் இந்திய அணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது. இந்தப் பிரிவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா பெறும் முதல் பதக்கம் இதுவாகும்.

அரையிறுதிப் போட்டியில் இந்திய ஆண்கள் குவாட்ரண்ட் அணி, போட்டியை நடத்தும் ஜப்பான் அணியை எதிர்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 02 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தது.

செட் விவரம்: முதல் செட்: இந்தியா 12 – 15 ஜப்பான் இரண்டாவது செட்: இந்தியா 13 – 15 ஜப்பான் இரு செட்களிலும் இந்திய வீரர்கள் கடுமையாகப் போராடிய நிலையில், ஜப்பான் அணி இறுதியில் வெற்றியைப் பதிவு செய்தது.

செபாக்டாக்ரா போட்டி விதிமுறைகளின்படி, அரையிறுதியில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் வெண்கலப் பதக்கம் வழங்கப்படுகிறது. இதனால், இந்திய அணிக்கு இந்தப் பிரிவில் வரலாற்றுச சிறப்புமிக்க வெண்கலப் பதக்கம் கிடைத்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் செபக்டக்ராவில் இந்தியா வெல்லும் 3வது பதக்கம் இதுவாகும். 2018 – ஆண்கள் அணி பிரிவு: வெண்கலம் 2022 – பெண்கள் அணி பிரிவு: வெண்கலம் தற்போதைய போட்டி – ஆண்கள் குவாட்ரண்ட் பிரிவு: வெண்கலம் இறுதிக்கட்டம் ஜப்பானில் நடைபெற்று வரும் 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கி உள்ளது. போட்டியின் நேற்றைய முந்தைய நாளில் இந்தியா நான்கு தங்கப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் தனது எண்ணிக்கையை உயர்த்தியிருந்த நிலையில், தற்போது செபக்டக்ராவிலும் மற்றொரு பதக்கம் இந்தியாவின் கணக்கில் சேர்ந்துள்ளது.

# தமிழக வீராங்கனைக்கு முதல்அமைச்சர் விஜய் வாழ்த்து



ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் படகோட்டப் போட்டி பெண்கள் டிங்கி பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனைக்கு முதல்அமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் படகோட்டப் போட்டி (Sailing) பெண்கள் டிங்கி பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுதமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது இச்சாதனையைப் பாராட்டும் வகையில், தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும். திறமை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால் அவர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.

படகோட்ட வீராங்கனை நேத்ரா குமணன் அவர்களின் வெற்றி, தமிழ்நாட்டின் இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கும். எதிர்காலத்திலும் அவர் பல வெற்றிகளைப் பெற்று புதிய சாதனைகளைப் படைத்திட வாழ்த்துகள். என தெரிவித்துள்ளார்.

# ஓடிடியில் வெளியாகும் அஷ்ரப்பின் "போட்டோகிராபர்" திரைப்படம் .. எதில் பார்க்கலாம்?




அஷ்ரப்பின் 'போட்டோகிராபர்' படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

'ரா' படத்தின் மூலம் ஹீரோவாக அறிமுகமான அஷ்ரப் தற்போது 'போட்டோகிராபர்' என்ற படத்தில் நாயகனாக நடித்திருப்பதோடு, அவரே படத்தை இயக்கவும் செய்துள்ளார். இவருக்கு ஜோடியாக ஜனனி சுவாமிநாதன் நடித்துள்ளார்.

கருணாகரன், ஆடுகளம் நரேன், "உறியடி" சிவா, தேவி மகேஷ், ஜே.பி. ஜெய், வேலா ராமமூர்த்தி, நிழல்கள் ரவி மற்றும் வெற்றிவேல் ராஜா நடித்துள்ளனர். ராஜ்குமார்சந்திரசேகன்இசைஅமைத்துள்ளார். ஏபிஎஸ்என்டர்டெய்ன்மென்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் எஸ். அப்துல் பாசித் தயாரித்துள்ளார்.

இந்தப் படம் கடந்த ஆகஸ்ட் 7ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது.

புகைப்படக் கலைஞரான அஷ்ரப், யாருடைய கண்களுக்கும் புலப்படாத, தங்க மரத்தை தேடி கொடைக்கானல் பகுதிக்குச் செல்ல திட்டமிடுகிறார். ஆனால், வழி தெரியாமல் திசைமாறி, அமானுஷ்யங்கள் நிறைந்த அடர்ந்த காட்டுக்குள் சிக்கிக்கொள்ளும் அவர், அங்கிருக்கும் மர்மங்களை எதிர்கொண்டு எவ்வாறு வெளியே வருகிறார் என்பதே படத்தின் மையக்கரு.

உளவியல் சார்ந்த சர்வைவல் திரில்லர் பாணியில் எடுக்கப்பட்டுள்ள 'போட்டோகிராபர்' படம், செப்டம்பர் 25 ஆம் தேதி அமேசான் பிரைம் ஓடிடியில் வெளியாகவுள்ளது.

# நிவின் பாலியின் "பெத்லகேம் குடும்ப யூனிட்" படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிப்பு



நிவின் பாலியின் 'பெத்லகேம் குடும்ப யூனிட்' படத்தின் ஓடிடி வெளியீட்டுத் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிஷ் ஏடி இயக்கத்தில் நிவின் பாலி மற்றும் மமிதா பைஜு நடிப்பில் உருவான 'பெத்லகேம் குடும்ப யூனிட்' படம் கடந்த ஆகஸ்ட் 21 ஆம் தேதி மலையாள திரையரங்குகளில் வெளியானது.

ஷியாம், சங்கீத் பிரதாப், வினய் போர்ட் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பகத் பாசில், திலீஷ் போத்தன் மற்றும் ஷியாம் புஷ்கரன் ஆகியோர் 'பாவனா ஸ்டுடியோஸ்' சார்பில் இப்படத்தை தயாரித்துள்ளனர். விஷ்ணு விஜய் இசையமைத்துள்ளார்.

நாயகனுக்கும் 10 வயது குறைவான நாயகிக்கும் இடையேயான காதல் கதையை மையமாகக் கொண்டு, வெளியான இந்தப் படம், ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்ததால் நிவின் பாலி , மமிதா பைஜு நடித்த 'பெத்லகேம் குடும்ப யூனிட்' படம் கடந்த செப்டம்பர் 4 ஆம் தேதி தமிழ், தெலுங்கில் வெளியானது.

# திரையரங்குகளை தொடர்ந்து ஓடிடியில் 'சர்தார் 2'..

'சர்தார் 2' படத்தின் ஓடிடி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் அமேசான் பிரைம் வீடியோ ஓடிடி தளத்தில் அக்டோபர் 1ம் தேதி வெளியாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பி.எஸ்.மித்ரன் இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் கடந்த 2022ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'சர்தார்'. ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது இதன் இரண்டாம் பாகமான 'சர்தார் 2' உருவாகியுள்ளது. கடந்த 10ம் தேதி திரையரங்குகளில் வெளியான இப்படம் தற்போது கலவையான விமர்சனங்களை பெற்று வருவதாக கூறப்படுகிறது. 'சர்தார் 2' படத்தில் கார்த்தி அப்பா மகன் என இரட்டை வேடங்களில் நடித்துள்ளார். அவருடன் எஸ்.ஜே.சூர்யா, மாளவிகா மோகனன், ஆஷிகா ரங்கநாத், ரஜிஷா விஜயன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு சாம் சி.எஸ். இசையமைத்துள்ளார். இந்த படம் சாம் சி.எஸ். இசையமைக்கும் 100வது திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், 'சர்தார் 2' படத்தின் ஓடிடி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் அமேசான் பிரைம் வீடியோ ஓடிடி தளத்தில் அக்டோபர் 1ம் தேதி வெளியாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் படம் வெளியாகும்என்றும்கூறப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்தஅதிகாரப்பூர்வஅறிவிப்புஇதுவரைவெளியாகவில்லை. விரைவில் படக்குழு தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரையரங்குகளில் 'சர்தார் 2' படத்தை காணத் தவறிய ரசிகர்கள், ஓடிடி வெளியீட்டுக்காக காத்திருக்கின்றனர். அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் பட்சத்தில், படத்தை ஓடிடியில் காணும் வாய்ப்பு ரசிகர்களுக்கு கிடைக்கும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.